**MCOP: 3**/2025

Date: 27.01.2026.

ம.சா.1 சுந்தர், த/பெ. ராமசாமி

**<u>சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

சம்பவ இடத்திலிருந்து AVM மருத்துவமனைக்கு 20 நிமிடத்தில் வந்துவிடலாம். ம.சா.ஆ.2 ல் AVM மருத்துவமனையில் இரவு 10.00 மணிக்கு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.1ல் 15.07.2024ல் இரவு 08.35 மணிக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.2ல் காவல் நிலையத்திற்கு இரவு 10.00 மணிக்கு முன்பே தகவல் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையம் 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. விபத்து சம்பந்தப்பட்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படுவது என்னுடைய இருசக்கர வாகனம் மற்றும் விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கைகள் என்றால் சரிதான். அதில் லாரியின் முன்வலதுபக்க இன்டிகேட்டர் மட்டும் சேதமடைந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வாகனம் எனக்கு பின்னால் வந்து என்மீது மோதியிருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல.

நான் சொல்வதுபோல் அதிவேகமாக வந்து மோதியிருந்தால் இரு வாகனங்களுக்கும் அதிக சேதம் ஆகியிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. நான் தலைகவசம் அணியாமல் இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றும் தலைகவசம்

அணிந்திருந்தால் முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கும் என்றும் குற்றவியல் வழக்கில் அதை ஆஜர்படுத்தியிருப்பார்கள் என்றும் தற்போது வழக்கிற்காக பின்னிட்டு சொல்லியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. தற்போதும் நான் TANGED CO ல் வேலை பார்த்து வருகிறேன். நான் எனது அலுவலகத்தில் விபத்திற்கான மருத்துவ செலவுகளை பெற்றுக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரிடம் இருந்து அதிக இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது மனுவில் ரூ.25 லட்சம் இழப்பீடாக கோரியுள்ளேன் என்றால் ரூ.35 லட்சம் கோரியுள்ளேன். அசல் மனுவில் ரூ.27 லட்சம் என்று சொல்லிவிட்டு அதை ரூ.25 லட்சமாக குறைத்துக்கொண்டு தற்போது நிரூபண வாக்குமூலத்தில் ரூ.35 லட்சம் என்று அதிகப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எனக்கு எவ்வித நிரந்தர ஊனமும் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டதால் 3ம் எதிர்மனுதாரர் எந்தவித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. என்னுடைய இருசக்கர வாகனத்தை நான் காப்பீடு செய்துள்ளேனா என்றால் சோழமண்டலம் இன்சூரன்சில் காப்பீடு செய்துள்ளேன். அந்த நிறுவனத்தை நான் வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்களினால் நான் எத்தனை நாட்கள் வேலைக்கு செல்லவில்லை என்பதற்கான

ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது சம்பள விவர பட்டியலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

**ஒம்/- R.V.ராஜகுமார்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**